( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

DVC No. 13/2023

Name : Nancy **P.W.1**
Father/Husband Name : Stephen
Caste :
Calling :
Religion :
Age :
Date : 13-08-2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2024

**<u>குறுக்கு விசாரணை– சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்</u>**

1. நான் பி,காம் படித்துள்ளேன். நான் தற்போது மறைமலை நகரில் உள்ள ஊரி என்ற தனியார்நிறுவனத்திர் மாதம் ரூ.10 ஆயிரத்திற்கு வேலை செய்து வருகிறேன், 29/09/2016 அன்று கன்னியாகுமரி மாவட்டம் புனித அந்தோணியர் ஆலயம் கருங்கால் என்ற இடத்தில் கிருஸ்துவ முறைபடி எனக்கும் எதிர் மனுதாரருக்கும் திருமனம் நடந்தது என்றால் சரிதான். எதிர் மனுதாரர் தரப்பில் திருமணத்தின்போது சிலுவை வைத்த 10 பவன் தங்க தாலி போட்டப்பட்டது என்றால் 9 பவன் தாலி போடப்பட்டது. தேவாலயத்தில் திருமணம் முடிந்தபிறகு எதிர் மனுதாரர் வீட்டில் வரவேற்பு விழா நடந்தது என்றால் சரிதான். என்னுடைய திருமணத்தில் என் சார்பில் என் உறவினர்கள் 10 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

2. நான் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் பணி செய்த போது எதிர் மனுதாரர் என்னை ஏமாற்றியதால் நான் எதிர் மனுதாரருக்கு எதிராக செங்கல்பட்டு மகளிர் காவல் நிலையத்தில் எடபோது புகார் கொடுத்தேன் என்றால் 2015 ல் புகார் கொடுத்தேன். தேதி மாதம் நியாபகம் இல்லை. அந்த புகார் அல்லது மனு ரசீது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. திருமணத்தின் போது வரதட்ணையாக 8 ½ சவரன் மற்றும் 1 ½ சவரன் நகை கொடுத்ததாக குறிப்பிட்டதில் என்ன நகை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மொத்தம் 9 ½ நகையில் எந்த நகைகள் எதிர் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது என்றால் 1 ½ சவரன் தங்கள் வளையம் 2 பவனில் செயின் ½ பவனில் 2 கம்பல், ¾ பவனில் ஒரு நெக்லஸ் ¾ பவனில் 1 வளையம் மற்றும் 3 சிறிய மோந்திரங்கள்.

3. இந்த நகைகள் வாங்கியதற்கான ரசீதுகள் உள்ளதா என்றால் மேற்படி நகைகள் திருமணத்திற்கு முன்பே வாங்கப்பட்டது அதனால் ரசீதுகள் தற்போது என்னிடம் இல்லை. எதிர் மனுதாரருக்கு ரூ. 2,50,000/- கொடுக்கப்பட்டதாக சொல்லுவது யார் முன்னிலையில் கொடுக்கப்ட்டது என்றால் எதிர் மனுதாரர் என் பெற்றோரிடம் ரொக்கமாக வாங்கினார்கள். தாலி பிரிக்கும் சடங்கு செய்ததாக நான் சொல்லியுள்ளேனா என்றால் நான் அதை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ரூ. 2,50,000/- ரொக்கமாக கொடுப்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நானும் எதிர் மனுதாரரும் கூடுவாஞ்சேரில் லலிதா நகரில் ஒன்றாக வசிக்கும் போது செங்கல்பட்டு மகளிர்ல நீதிமன்றத்தில் புகார் தாக்கல் செய்தேன் என்றால் அந்த வீட்டில் தான் இருந்தேன் எதிர் மனுதாரர் என்னை அடித்து விட்டு 6 மாதங்கள் காணாமல் போய்விட்டார் அதன் பிறகு தான் நான் புகார் கொடுத்தேன், எதிர் மனுதாரர் காணாமல் போய்விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் காவல் நிலையத்தில் எனது புகாரை ஏற்கவில்லை.

4. நான் வழக்கிற்காக எதிர் மனுதாரர் என்னை அடித்து விட்டு 6 மாதங்கள் காணாமல் போய்விட்டார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் உண்மையில் காணாமல் போயிருந்தால் நான் புகார் கொடுத்து அந்த புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை பெயர் அருள்நாதன் தாயர் பெயர் சோபியா அண்ணன் பெயர் பிராங்கிலின். மேற்படி பெயர்கள் அனைத்தும் கிருஸ்துவ பெயர்கள் என்றால் சரிதான். செங்கல்பட்டு மாவட்டம் செய்யூரில் உள்ள புனித அந்தோணியர் ஆலையத்திற்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். அந்த ஆலயத்தில் நாங்கள் உறுப்பினர் ஆக உள்ளோம் என்றால் எனது பெற்றோரும் சகோதரும் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

5. திருமணத்தின்போது எனக்ஷகு போடப்பட்ட தாலி செயினை நான் தற்போது அணிந்துள்ளேனா என்றால் தாலி செயினை நான் அடகு வைத்துள்ளேன். அடகு வைத்த ரசீதினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செ்துள்ளேனா என்றால் இல்லை வங்கியில் தான் அடகு வைத்துள்ளேன். எனது தாயார் வேலைக்கு செல்லவில்லை. தந்தை செக்குரிடியாக வேலை செய்து மாதம் ரூ.15,000/- பெறுகிறார்., எனது அண்ணன் தற்போது தனியார் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ. 15,000/ -

பெறுகிறார்.என்னுடன் தற்போது எனது அம்மா மற்றும் சகோதரர் உள்ளார்கள். எனது அப்பா செய்யூரில் தங்கி வேலை செய்து வருகிறார். நான் பிரமாண வாக்குமூலத்தில் திருமணத்திற்கு முன்பும் திருமணத்தின் பின்பும் என் பெற்றோருடன் வாழ்ந்து வருகிறேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் எதிர் மனு தாரர் என்னுடன் இல்லாததா சமயத்தில் நான் என் பெற்றோருடன் சென்று இருப்பேன்.

எதிர் மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டுதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/– N.Anupriya, 13.08.2024

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.